# சீமைக்கருவேல மரங்களை அகற்றுவதில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை - உயர் நீதிமன்ற நீதிபதிகள் அதிருப்தி



**சென்னை:** தமிழகத்தில் சீமைக்கருவேல மரங்களை அகற்றும் விவகாரத்தில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை என அதிருப்தி தெரிவித்துள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகள், இதில் உண்மையிலேயே தமிழக அரசுக்கு ஆர்வம் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றக் கோரி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட பலர் தாக்கல் செய்திருந்த வழக்குகள் மீதான விசாரணை, சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரதசக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது.

அப்போது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், தென்காசி மாவட்டத்தில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவிலும், திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் 500 ஹெக்டேர் பரப்பளவிலும் சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதை படித்துப் பார்த்த நீதிபதிகள், ‘‘சீமைக்கருவேல மரங்களை அகற்றும் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டால் மட்டுமே அவை மீண்டும் வளராமல் தடுக்கப்படும். இதுதொடர்பாக குழுக்கள் அமைக்க பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை அதிகாரிகள் இதுவரை அமல்படுத்தவில்லை. குறிப்பாக, சீமைக்

கருவேல மரங்களை அகற்றும் விஷயத்தில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை’’ என அதிருப்தி தெரிவித்தனர்.

**சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு:** பின்னர், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சீமைக்கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்றுவது என அரசு கொள்கை முடிவு எடுத்த பிறகும்கூட, அதுதொடர்பாக உயர் நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுகளை அதிகாரிகள் அமல்படுத்தவில்லை எனும்போது, இந்த விவகாரத்தில் உண்மையிலேயே தமிழக அரசுக்கு ஆர்வம் உள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**விரைவில் குழுக்கள்:** அப்போது அரசு தரப்பில், இந்த விவகாரத்தில் உயர் நீதிமன்ற உத்தரவுப்படி விரைவில் குழுக்கள் அமைக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

அதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஜூலை 5-ம்தேதிக்குள் அறிக்கை தாக்கல்செய்ய வேண்டும், இல்லாவிட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என எச்சரித்து, விசாரணையை ஜூலை 5-ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர்.

## நீச்சல் போட்டியில் மதுஸ்ரீக்கு தங்கம்



**சென்னை**: சென்னையில் நடைபெற்றுவரும் 9-வது மாநில அளவிலான குறுந்தூர நீச்சல் போட்டியில் எஸ்.டி.ஏ.டி. அணியைச் சேர்ந்த கிரிஷிகேசவ், மதுஸ்ரீ ஆகியோர் தலா 2 தங்கப் பதக்கம் வென்றனர்.

சென்னை முகப்பேரில் உள்ள எஸ்டிஏடி டால்பின் நீச்சல் அகாடமி சார்பில் 9-வது மாநில அளவிலான குறுந்தூர நீச்சல் போட்டிகள் நடத்தப்படுகிறது. மாநிலம் முழுவதிலும் இருந்து 650 வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற இதன் முதல் நாள் போட்டியில் கிரிஷிகேசவ், மதுஸ்ரீ ஆகிய இருவரும் தலா 2 தங்கபதக்கம் வென்றனர்.

கிரிஷிகேசவ் 100மீட்டர் பேக்ஸ்ட்ரோக் (1:04.00), 200மீட்டர் பேக்ஸ்ட்ரோக் (2:22.00) பிரிவிலும், மதுஸ்ரீ 100மீட்டர் பேக்ஸ்ட்ரோக் (1:16.21), 400மீட்டர் ப்ரீஸ்டைல் (5:20.13) ஆகிய பிரிவிலும் தங்கம் வென்றனர்.

## சென்னையில் ஜூன் 19 முதல் 21-ம் தேதி வரை ட்ரோன்கள் பறக்க தடை



**சென்னை:** சென்னையில் ஜூன் 19 முதல் 21ம் தேதி வரை ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது சென்னை காவல்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்,"Third Sustainable Finance Working Group (SFWG) கூட்டம் 19-6-2023 முதல் 21-6-2023 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. இந்த Third Sustainable Finance Working Group (SFWG) meeting மாநாட்டில் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். இவர்கள் அனைவரும் மகாபலிபுரத்தில் நடைபெற உள்ள கருத்தரங்கில் பங்கேற்க உள்ளனர;.

எனவே, 18-6-2023 முதல் 22-6-2023 வரையில் சென்னை பெருநகர காவல்நிலைய எல்லைக்கு உட்பட்ட மேற்கூறிய பிரதிநிதிகள் வருகை, தங்கும் இடங்கள் மற்றும் மேற்படி பிரமுகர்கள் பயணம் செய்யும் வழித்தடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு அந்தப் பகுதிகள் மற்றும் வழித்தடங்களில் 18-6-2023 முதல் 22-6-2023 வரையில் ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்படுகிறது." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.